







ஈரோடு வடக்கு – தெற்கு மாவட்டக் கழகம் சார்பில் கழக மூத்த முன்னோடிகள், கொரோனா மற்றும் விபத்துகளால் குடும்ப உறுப்பினர்களை இழந்தவர்கள், மாற்றுத்திறனாளிகள் என கழகத்தைச் சேர்ந்த 2600 பேருக்கு முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு, தலா ரூ.10 ஆயிரம் பொற்கிழி மற்றும் நிதியுதவியை, பெருந்துறையில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில், கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். கழக துணைப் பொதுச்செயலாளர் அந்தியூர் செல்வராஜ் எம்.பி., ஈரோடு தெற்கு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் சு.முத்துசாமி, வடக்கு மாவட்டச் செயலாளர் என்.நல்லசிவம் உள்ளிட்டோர் உடன் உள்ளார்கள்.

### வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில்

# அடிமைகளையும் - முதலாளிகளையும் விரட்டியடிக்க வேண்டும்!

## சேலத்தில் இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வலியுறுத்தல்!

**சேலம், நவ. 23 -**

**“வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாட்டில் அடிமைகளையும் - முதலாளிகளையும் விரட்டியடிக்க வேண்டும்” என்று சேலத்தில் நடைபெற்ற இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்தி உரையாற்றினார்.**

ஒருங்கிணைந்த சேலம் மாவட்ட தி.மு.க. இளைஞரணி செயல்வீரர்கள் கூட்டம் சீலநாயக்கன்பட்டியில் நடைபெற்றது. முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சருமான கே.என்.நேரு தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் இளைஞர் அணிச் செயலாளரும்,



அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றினார்.

அப்போது அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில்,

டிசம்பர் 17ம் தேதி சேலத்தில் நடைபெறும் மாநாடு, இந்தியாவிற்கே எடுத்துக்காட்டாக அமையும் என்று கூறினார். இரண்டரை ஆண்டு சாதனைகள் இந்த மாநாட்டில் பேசப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகையால் இதுவரை 1 கோடியே 14 லட்சம் பயனாளிகள் பயன் பெற்றுள்ளதாகவும், மற்ற மாநிலங்களிலும் நம்முடைய திட்டங்கள் பின்பற்றப்பட்டு வருவதாகவும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார்.

2021ம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் அடிமைகளை விரட்டியடித்ததுபோல், வரும் நாடாளுமன்றத் தேர்தலிலும் அடிமைகளையும், அவர்களின் முதலாளிகளையும் விரட்டியடிக்க வேண்டும் என உதயநிதி ஸ்டாலின் வலியுறுத்தினார்.

சாலை திட்டங்கள் மற்றும் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் ஒன்றிய பா.ஜ.க. அரசு இமாலய ஊழலில் ஈடுபட்டுள்ளதாக அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குற்றம்சாட்டினார்.

இக்கூட்டத்தில் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், மாவட்டச் செயலாளர்கள் இரா.ராஜேந்திரன் எம்.எல்.ஏ., எஸ்.ஆர்.சிவலிங்கம், டி.எம்.செல்வகணபதி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஆர்.பார்த்திபன், பொன். கௌதம சிகாமணி மற்றும் இளைஞரணி நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

### கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. - அமைச்சர் பி.கே.சேகர்பாபு முனனிலையில்

# அம்பத்தூர் வடக்குப் பகுதியில் கலைஞர் நூற்றாண்டு விழா!

## கனிமொழி என்.வி.என்.சோமு எம்.பி. தொடங்கி வைக்கிறார்! ஜோசப் சாமுவேல் தலைமை!

சென்னை,நவ.23-

சென்னை கிழக்கு மாவட்டம் அம்பத்தூர் வடக்கு பகுதி தி.மு.க சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தொகுதியில் பணியாற்றும் மாநகராட்சி தூய்மை பணியாளர்களுக்கான தொடர் மூன்று நாள் (நவ. 24 -25- 26) முழு உடல் பரிசோதனை மருத்துவ முகாம் நாளை 24.11.2023 வெள்ளிக்கிழமை காலை 9.00 மணி ராஜேஸ்வரி நவராஜ் மஹால், ஒரகடம், அம்பத்தூர்.(அம்பேத்கர் சிலை அருகில்) நடைபெறுகிறது.

ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ. தலைமை தாங்குகிறார்.

கழக நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் .டி.ஆர்.பாலு எம்.பி. மாவட்டச் செயலாளரும் அமைச்சருமான பி.கே.சேகர்பாபு , பி.கே.மூர்த்தி, பகுதிச் செயலாளர்கள் டி.எஸ்.பி.இராஜகோபால், எம்.டி.ஆர்.நாகராஜ், மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் டாக்டர்ஜி.சாந்தகுமாரி, விரமேஷ் (எ) நீலகண்டன், எல்.பி.எப். மோகன், ஏ.பி.பூர்ணிமா, ஜி.வி.நாகவள்ளி, து.ஆயிரம், கு. கிருஷ்ணமூர்த்தி, ஜெ.பாலமுருகன், மா. பச்சையப்பன், க.முரளிபாபு, அ.செல்வம், க.கதிஜா, மா.ரமேஷ், வீரராகவன், ராதாகிருஷ்ணன், மு.இரகு, த.கண்ணபிரான், எம்.கமல் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

பி.வி.மூர்த்தி, பொன்.நவராஜ்ரவி, க.ஜீவா, எஸ்.பி.அரிகிருஷ்ணன் , மா.குப்புசாமி, எம்.ஹரிகிருஷ்ணன், எம்.குணசேகரன், ப.மதி, ஆ.இரா. அருண், கோ.சேகர்லால் ஆகியோர் வரவேற்கின்றனர்.

அம்பத்தூர் தொகுதியில் பணியாற்றும் மாநகராட்சி தூய்மை பணியாளர்களுக்கான தொடர் மூன்று நாள் முழு உடல்பரிசோதனை மருத்துவ முகாமை கழக மருத்துவ அணித் தலைவர் கழக செய்தி தொடர்பாளர் திருமதி. கனிமொழி என்.வி.என்.சோமு துவக்கி வைக்கிறார்.

இதில் மேயர் பிரியாராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் அ.வெற்றிஅழகன், ப.தாயகம்கவி, இ.பரந்தாமன், கழக தொழிலாளர் அணிச் செயலாளர் பி.டி.சி.செல்வராஜ் உள்ளிட்டமாவட்டத்திற்குட்பட்ட கழக மாநில நிர்வாகிகள், பகுதிச் செயலாளர்கள், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், வட்டச் செயலாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், வட்ட நிர்வாகிகள், கழகச் செயல்வீரர்கள் கலந்து கொள்கின்றனர்.

வீ.ரவீந்திரன் நன்றி கூறுகிறார்.



கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நேற்று (22.11.2023) கதிரியக்கவியல் துறையில் ரூ.12 கோடி மதிப்பில் PET CT SCAN கருவியினை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், திறந்து வைத்தார். அருகில் மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்தி குமார் பாடி மருத்துவ கல்வி மற்றும் ஆராய்ச்சி மைய இயக்குநர் மரு.சங்குமணி, மாநகராட்சி ஆணையாளர் மா.சிவகுரு பிரபாகரன் மாமன்ற உறுப்பினர் திருமதி.சுமா, அரசு மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.நிர்மலா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நா.கார்த்திக் ஆகியோர் உள்ளனர்.




காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூரில் உள்ள தனியார் பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற மாபெரும் கல்விக் கடன் முகாமினை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் துவக்கி வைத்து 112 பயனாளிகளுக்கு ரூ.12.39 கோடிக்கான கடனுதவி ஆணைகளை வழங்கினார். அருகில் மாவட்ட ஆட்சித் தலைவர் கலைச்செல்வி மோகன், சட்டமன்ற உறுப்பினர் கு.செல்வப்பெருந்தகை, மாவட்ட வருவாய் அலுவலர் செ.வெங்கடேஷ், மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் படப்பை ஆ.மனோகரன், ஒன்றியக் குழுத் தலைவர் எஸ்.டி.கருணாநிதி ஆகியோர் உள்ளனர்.